பேரவை)யில் பொதுப்பணித் துறை குறித்து தொடரப்பட்டுள்ள பரிந்துரைகளின்மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய தொண்ணூற்று ஒன்பதாவது அறிக்கை.

6. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளின்மீது பொதுக்கணக்குக் குழு அளித்த முப்பத்தோறாவது அறிக்கை (ஏழாவது பேரவை)யில் போக்குவரத்துத் துறை குறித்த பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றிய நூறாவது அறிக்கை.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திருமதி ரமணி நல்லதம்பி, அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் எட்டாவது (பத்தாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்).

சென்னைப் பல்கலைக் கழக மற்றும் மதுரை–காமராசர் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் மதுரை–காமராசர் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1993 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக மற்றும் மதுரை–காமராசர் பல்கலைக் கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு அறிமுகம்செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

[*1993 ஏப்ரல் 13*

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. மானியக் கோரிக்கைகள், 1993-94--விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 35-பாசனம்.

(ஆ) கோரிக்கை எண் 36-பொதுப்பணிகள்-கட்டிடங்கள்.

(இ) கோரிக்கை எண் 37-பொதுப்பணிகள்-பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும்.

(ஈ) கோரிக்கை எண் 38-சாலைகளும், பாலங்களும்.

(உ) கோரிக்கை எண் 54-பாசனம் குறித்த மூலதனச் செலவு.

(ஊ) கோரிக்கை எண் 55-பொதுப் பணிகள்-கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

(எ) கோரிக்கை எண் 56-சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-94 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

12-4-1993 அன்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் கோரப்பட்ட மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம்--தொடர்ச்சி.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பேரவையில் வைத்துள்ள மானியக் கோரிக்கை எண் 38-க்கான சாலைகள் மற்றும் பாலங்கள் பற்றிய கொள்கைக் குறிப்பில் 9-வது பக்கத்தில் சாலை மேம்பாட்டுப் பணிகள் தனியார் ஈடுபாடு என்பது பற்றி வருகிறபோது, நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் சில சாலைகளை தனியாரிடம் ஒப்படைப்பதற்கான பூர்வாங்க ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகியுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது குறித்து திரு. பி.வி. இராஜேந்திரன் ஒரு பிரச்சினையை என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, அது சரியான தகவலா என்று கேட்டுள்ளார். ஆங்கிலத்திலுள்ள கொள்கைக் குறிப்பில் 8-வது பக்கத்தில் அதுபற்றிக் குறிப்பிடுகிறபோது '. . . a "Memorandum of Understanding" between Government of Tamil Nadu and Infrastructure Leasing and Financial Services Limited has been signed.'